(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 6th Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| கணக்கீடு I<br>Accounting I | Two Hours<br>Gr -13 (2022) | 33 | T | I |

**அறிவுறுத்தல்கள்:-**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிகோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளி கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் உரித்தாகும்.

சுட்டெண் :....................................

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 – 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

## பகுதி – I

01. “விசேட நோக்க” நிதிக்கூற்றின் நோக்கமாக அமைவது.
   1) நிறுவனத்தின் மீது அக்கறை காட்டும் தரப்பினர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவது.
   2) உள்ளக, வெளியக தரப்பினர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவது.
   3) நிறுவனத்தின் வெளியக தரப்பினர்களுக்கு தேவையான தகவல்களை தீர்மானமெடுத்தலுக்காக வழங்குதல்.
   4) நிறுவனத்தின் முகாமைத் தரப்பினர்களுக்கு தேவையான தகவல்களை தீர்மானமெடுத்தலுக்காக வழங்குதல்.
   5) நிறுவனத்தின் தகவல்களை கணக்காய்விற்காக வழங்குதல். (……….)

02. ராமன் நிறுவனத்தில் இருந்து எடுக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.
   A – மூல ஏடுகளில் இருந்து பேரேட்டுக்கு மாற்றுதல்.
   B – மூல ஆவனங்களை தயார் செய்தல்.
   C – கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் இடம்பெறுதல்.
   D – மூல ஏடுகளில் பதிவு செய்தல்.
   E – நிதிக்கூற்றுக்கள் தயார் செய்தல்.
   1) ABCDE 2) BCDAE 3) CDBAE 4) DBCEA 5) CBDAE
   (……….)

03. கபி வியாபார நிறுவனம் ரூபா 3,000 வங்கிக் கடன் வட்டி உள்ளடங்கலாக ரூபா 18,000 ஐ வங்கிக் கடன் தவனைப்பணத்தினைச் செலுத்தியிருந்தது. இக்கொடுக்கல் வாங்களினால் கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கமானது.

| | பொறுப்புக்கள் | உரிமை |
|---|---|---|
| 1) | குறைதல் ரூ 3000 | அதிகரித்தல் ரூ 3000 |
| 2) | குறைதல் ரூ 15000 | குறைதல் ரூ 3000 |
| 3) | குறைதல் ரூ 18000 | அதிகரித்தல் ரூ 18000 |
| 4) | குறைதல் ரூ 18000 | குறைதல் ரூ 18000 |
| 5) | குறைதல் ரூ 21000 | குறைதல் ரூ 21000 |

(……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

04. 1/4/2021ல்மதன் வியாபார நிறுவனம் ரூ 100 000 குறித்த விலையான இருப்புக்கான 10% வியாபார கழிவுடன் பிரனவனுக்கு கடனுக்கு விற்பனை செய்த இப்பொருட்களின் கிரயம் ரூபா 60,000 15/04/2021ல் குறித்த பொருட்கள் மாதிரிக்கு பொருத்தமற்றதாக காணப்பட்டதால் பிரனவனால் ரூபா 30,000 பெறுமதியானவை (கிரயம் 20,000) திருப்பி அனுப்பப்பட்டது. 30-04-2021ல் மதன் 5% காசுக் கழிவுடன் கடன்பணத்தை பெற்றுக்கொண்டார்.
மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை பிரனவன் நிறுவனத்தில் பதிவு செய்வதற்கு தேவையான மூல ஆவனங்கள் முறையே
1) பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு
2) விற்பனை நாளேடு, உட்திரும்பல் நாளேடு, காசு பெறுவனவு நாளேடு
3) பட்டியல், வரவுத்தாள், கைச்சாத்து
4) கொள்வனவு நாளேடு, வெளித்திரும்பல் நாளேடு, காசு கொடுப்பனவு நாளேடு
5) பட்டியல், வரவுத்தாள், பொதுநாட்குறிப்பேடு (……….)

05. இலங்கையில் பின்பற்றப்படும் நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்டவாக்கத்தின் படி பின்வருவனவற்றுள் எது நிதித்தகவல்களின் அடிப்படை குணாதிசயமாகும்.
1) ஒப்பிடக்டியதன்மை 2) பொருத்தப்பாடு 3) சான்றுபடுத்தக்கூடியது
4) காலம் தவறாமை 5) விளங்கிக் கொள்ளும் தன்மை (……….)

06. பின்வருவனவற்றில் எவ்வெண்ணக்கருவானது, சொத்து, பொறுப்பினை நிதி நிலமைக்கூற்றில் நடைமுறை, மற்றும் நடைமுறை அல்லாதது என வகைப்படுத்துவதற்கு வழிவகுக்கின்றது.
1) பாதுகாப்பு 2) வணிக அலகு 3) தொடர்ந்து இயங்கும்
4) கால அளவு 5) வரலாற்று கிரய (……….)

❖ பின்வரும் தகவல்களை பயன்படுத்தி 07, 08ம் வினாக்களுக்கு விடை தருக.
காசுக் கொடுக்ககல் வாங்கல்கள் அனைத்தும் வங்கியின் நடைமுறை கணக்கினூடாக நடைபெறுகின்றது. 31-03-2022ல் வங்கிக் கூற்றின் செலவு மீதி ரூபா 32,000 அத்திகதியில் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியானது வசூலிக்கப்படாத காசோலை ரூபா 18,000 ஆல் மட்டும் வேறுபட்டுக் காணப்பட்டது. பின்வரும் தகவல்கள் காசு கொடுப்பனவு, பெறுவனவு நாளேட்டில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டதாகும்.

காசுப் பெறுவனவு நாளேட்டின் மொத்தம் - மார்ச் மாதத்துக்கானது ரூபா 130,000 காசுக் கொடுப்பனவு நாளேட்டின் மொத்தம் - மார்ச்மாதத்துக்கானது ரூபா 115000

வங்கிக் கூற்றில் பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள்.
மார்ச் மாதம் செலவு வைக்கப்பட்டது ரூபா 128,000
மார்ச் மாதம் மாற்றப்பட்ட காசோலை ரூபா 102,000

காசுக்கட்டுப்பாட்டுக்கணக்கில் தவறவிடப்பட்டவை.
நேரடி வைப்புக்கள் ரூபா 9,000
வங்கி கட்டணம் ரூபா 3,000

07. மார்ச் மாதத்துக்கான மாற்றப்படாததும், வசூலிக்கப்படாததுமான காசோலைகள் முறையே?
1) ரூ 13,000 ரூ 2,000 2) ரூ 20,000 ரூ 13,000 3) ரூ 13,000 ரூ 46,000
4) ரூ 13,000 ரூ 20,000 5) ரூ 16,000 ரூ 20,000 (……….)

08. 31-03-2022ல் நிதி நிலமைக்கூற்றில் காண்பிக்கப்பட வேண்டிய வங்கி மீதி
1) ரூ 71,000 2) ரூ 53,000 3) ரூ 21,000
4) ரூ 39,000 5) ரூ 47,000 (……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

09. 31-03-2022ல் முடிவடைந்த ஆண்டுக்காக ஒரு நிறுவனம் வெளிப்படுத்தியிருந்த இலாபம் ரூ 400,000 எனினும் நிதிக்கூற்றுக்களை பரிசீலனை செய்த போது பின்வரும் வழுக்கள் கண்டறியப்பட்டுள்ளது.

- கடன் கொடுத்தோரால் அனுமதிக்கபட்ட காசுக்கழிவு ரூ 10,000 கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக்கணக்கில் மாத்திரம் பதியப்பட்டு இருந்தது.
- வங்கிக் கடனுக்காக செலுத்திய வட்டி ரூ 30,000 வட்டி வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.
- விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகை ரூ 470,000 விற்பனை கணக்கிலும், கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கிலும் ரூ 740,000 என பதியப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட வழுக்களைத் திருத்திய பின்னர் சரியான இலாபம்

1) ரூ 320,000 2) ரூ 80,000 3) ரூ (320,000)

4) ரூ 110,000 5) ரூ (80,000) (……….)

10. 31-3-2022ல் முள்ளு வியாபார நிறுவனத்தில் இருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டது.

| | 31-03-2021 | 31-03-2022 |
|---|---|---|
| வியாபார வருமதியாளன் மீதான எதிர்பார்க்கை நட்டத்திற்கான படிகள் | ரூ 23,000 | ரூ 30,000 |

மேலதிக தகவல்கள்.

வியாபார வருமதியாளன் மீதியான ரூ 25,000 எதிர்பார்க்கை நட்டமாக நடைமுறை வருடத்திலேயே பதிவழிக்கப்பட்டிருந்தது.31-03-2022ல் முடிவடைந்த வருடத்திற்காக வருமானக்கூற்றில் வியாபார வருமதியாளன் மீதான எதிர்பார்க்கை நட்டமும், வியாபார வருமதியாளன் மீதான எதிர்பார்க்கை நட்டத்திற்கான படிகளும்.

1) ரூ 55,000 2) ரூ 32,000 3) ரூ 53,000

4) ரூ 25,000 5) ரூ 48,000 (……….)

11. ஒரு உற்பத்தி நிறுவனம் 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான பின்வரும் தகவல்களை வெளிப்படுத்தியிருந்தது.

| | |
|---|---|
| மூலப் பொருள் கொள்வனவு | ரூ 640,000 |
| நேர்க்கூலி | ரூ 40,000 |
| உற்பத்தி மேந்தலை | ரூ 260,000 |
| குறைவேலையில் ஏற்பட்ட அதிகரிப்பு | ரூ 20,000 |
| மூலப்பொருள் இருப்பில் ஏற்பட்ட குறைவு | ரூ 80,000 |
| உற்பத்தி அலகுகள் | 500 அலகுகள் |

பின்வருவனவற்றுள் மூலக்கிரயம் அலகுக்கான உற்பத்தி கிரயம் என்பன முறையே?

1) ரூ 1000,000, ரூ 1520 2) ரூ 760,000, ரூ 1520 3) ரூ 1000,000, ரூ 2000

4) ரூ 740,000, ரூ 2000 5) ரூ 760,000, ரூ 2000 (……….)

12. சசி வியாபார நிறுவனம் பெறுமதி சேர் வரிக்கு (VAT) 10% ல் பதிவு செய்துள்ளது. பின்வரும் தகவல்கள் ஏப்ரல், 2022 ற்குரிய தகவல்களாகும்.

| | |
|---|---|
| வரி உள்ளடங்கலாக விற்பனை | ரூ 176,000 |
| வரி நீங்கலாக கொள்வனவு | ரூ 90,000 |
| வரி உள்ளடங்கலாக கொள்வனவு திரும்பல் | ரூ 55,00 |
| மாதத்தில் பெறுமதி சேர் வரிக்காக செலுத்தப்பட்டது | ரூ 3500 |

30-04-2022ல் பெறுமதி சேர் வரியாக நிதி நிலமைக்கூற்றில் காண்பிக்கப்பட வேண்டிய தொகை?

1) பொறுப்பு ரூ 7500 2) சொத்து ரூ 4000 3) பொறுப்பு ரூ 4000

4) சொத்து ரூ 5650 5) பொறுப்பு ரூ 5650 (……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

13. ஸ்ரெபோ உற்பத்தி தொழிற்சாலையையும் விற்பனை பகுதியையும் வெவ்வேறாக கொண்டு வியாபாரத்தை நடாத்தி வருகின்றார். 31-03-2022ல் விற்பனைப்பகுதியில் உள்ள அனைத்து இருப்புக்களும் தீயால் அழிவடைந்தன.

| | மூலப்பொருள் | முடிவுப்பொருள் |
|---|---|---|
| 1/4/2021ல் இருப்பு | 100,000 | 200,000 |
| மூலப்பொருள் கொள்வனவு | 420,000 | |
| 31/03/2022ல் இருப்பு | 50,000 | |

ஏனைய தகவல்கள்

நிதியாண்டின் நேரடி மூலப்பொருள் செலவு நீங்கலாக உற்பத்திக்கிரயம் ரூ 180,000

மொத்த விற்பனை ரூ 900,000

நிறுவனமானது உற்பத்திக்கிரயத்தில் 20% இலாபத்தினை சேர்த்து விற்பனை செய்கின்றது.

பின்வருவனவற்றுள் மொத்த உற்பத்தி கிரயம், இருப்பு நட்டம் என்பன முறையே.

1) ரூ 650,000 ரூ 50,000 2) ரூ 650,000 ரூ 100,000 3) ரூ 650,000 ரூ 150,000

4) ரூ 700,000 ரூ 130,000 5) ரூ 700,000 ரூ 100,000 (……….)

14. ஒரு நிறுவனத்திற்கு சொந்தமான மோட்டார் வாகனத்துடன் தொடர்புடைய தகவல்கள் பின்வருமாறு.

| | ரூ "000" |
|---|---|
| 01-04-2021ல் மோட்டார் வாகனம் கிரயத்தில் | 4000 |
| 01-04-2021ல் திரண்ட பெறுமான தேய்வு | 750 |
| 01-10-2021ல் மோட்டார் வாகன விற்பனை மூலம் பெற்றகாசு (இவ்வாகனம் 01-04-2019ல் ரூ 1500,000 கொள்வனவு செய்யப்பட்டது) | 1000 |
| 01-01-2022ல் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் | 5000 |

மோட்டார் வாகனம் கிரயத்தில் வருடத்திற்கு 10% நேர்கோட்டடிப்படையில் பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றது. மேலும் மோட்டார் வாகனம் கொள்வனவுத்திகதியிலிருந்து பாவனைக்கு தயாராகவிருந்தது.

31-03-2022ல் முடிவடைந்த ஆண்டிற்கான மோட்டார் வாகனத்திற்கான பெறுமானத் தேய்வும், மோட்டார் வாகனத்தின் அகற்றல் மூலம் எழுந்த நட்டம் முறையே.

| | பெறுமானத் தேய்வு (ரூ) | நட்டம் (ரூ) |
|---|---|---|
| 1) | 375,000 | 200,000 |
| 2) | 400,000 | 350,000 |
| 3) | 450,000 | 125,000 |
| 4) | 525,000 | 500,000 |
| 5) | 900,000 | 50,000 |

(……….)

15. மாதவன் விளையாட்டுக்கழகத்தின் தகவல்கள் வருமாறு.

31-12-2021ல் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 300, மாதாந்த சந்தா கட்டணம் ரூ 50, 2021ம் ஆண்டின் இறுதியில், 5 அங்கத்தவர்கள் ஆண்டிற்கான சந்தாவினை செலுத்த தவறியிருந்தனர். 6 அங்கத்தவர்கள் தமது 6 மாத சந்தாவினை 2022ம் ஆண்டுக்காக செலுத்தியிருந்தனர். நிதியாண்டில் ஆயுள் அங்கத்துவக் கட்டணம் ரூ 60,000 பெற்றுக் கொள்ளப்பட்டது. இது பத்து வருடங்களுக்கு வருமானமாக பதிவழிக்கப்படல் வேண்டும். மொத்த அங்கத்தவர்களில், 50 ஆயுள் அங்க்தவர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். 31/12/2022ல் 15 அங்கத்தவர்கள் சந்தா செலுத்தத் தவறியிருந்தனர். 8 அங்கத்தவர்கள் 2023ம் ஆண்டிற்கான சந்தாவை செலுத்தியிருந்தனர்.

2022ம் ஆண்டிற்கான வருமான செலவுக்கணக்கிலும், பெறுவனவு கொடுப்பனவு கணக்கிலும் சந்தா தொடர்பாக சாட்டிதல் செய்யப்படும் தொகைகள் முறையே.

1) ரூ 156,000 ரூ 207,000 2) ரூ 240,000 ரூ 243,000 3) ரூ 150,000 ரூ 60,000

4) ரூ 180,000 ரூ 243,000 5) ரூ 156,000 ரூ 183,000 (……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

16. தாரனி PLCன் முகாமை 31-03-2022ல் முடிவடைந்த ஆண்டுக்காக வரைவு நிதிக்கூற்றினை 17/மே/2022ல் தயாரித்திருந்தது. 1/யூன் 2022ல் இயக்குனர் சபை பகுப்பாய்வு செய்திருந்தனர் பின்னர் 10/யூன் 2022 கையொப்பமிட்டிருந்தனர். 22/யூலை/2022ல் நிதிக்கூற்றுக்கள் பங்குதாரர்களுக்கு கிடைக்ககூடியதாக இருந்தததது மேலும் 25/யூலை/2022ல் அதிகாரமளிக்கப்பட்டிருந்தது.
LKAS 10ன் படி தாரனி PLCயின் நிதி நிலைமைக் கூற்றின் திகதிக்கு பின்னரான நிகழ்வுகள் எனும் அடிப்படையில் இனம்காணத்தக்க கால இடைவெளி யாது?
1) 31 மார்ச்ல் இருந்து 17/மே 2022 வரை
2) 31 மார்ச்ல் இருந்து 1/யூன் 2022 வரை
3) 31 மார்ச்ல் இருந்து 10/யூன் 2022 வரை
4) 31 மார்ச்ல் இருந்து 22/யூலை 2022 வரை
5) 31 மார்ச்ல் இருந்து 25/யூலை 2022 வரை (……….)

❖ பின்வரும் தகவல்களை பயன்படுத்தி வினா இல 17,18,19ம் வினாக்களுக்கு விடை தருக.
சிவன், சுதன், சதன் பங்காளர்களை கொண்ட பங்குடமையின் தகவல்கள் வருமாறு.
A. சுதனின் வருடாந்த சம்பளம் ரூ 24000.
B. நிதி ஆண்டில் ரூ 12000 மட்டும் சம்பளம் செலுத்தப்பட்டது.
C. பங்காளர்களுக்கிடையில் பகிரப்பட்ட லாபம் முறையே ரூ40,000, ரூ 30,000, ரூ 20,000
D. பங்காளன் சதன் வழங்கிய கடனுக்காகன வட்டி ரூ 3000 செலுத்த வேண்டியது ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை.
E. பங்காளர்கள் சிவன், சதன் மேற்கொள்ளப்பட்ட பொருள் பற்று முறையே ரூ 3000, ரூ2000 ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

17. பின்வருவனவற்றில் எது பங்காளர்களிடையே பகிரப்படும் லாப/ நட்டத்தை எடுத்து காட்டுவது.
1) A,B 2) A,C 3) A,B,C 4) A,B,C,D 5) A,B,C,D,E

18. 31-03-2022ல் முடிவடைந்த ஆண்டிற்கான சீராக்கத்தின் முன் தேறிய இலாபம்
1) ரூ 90,000 2) ரூ 102,000 3) ரூ 106,000 4) ரூ114,000 5) ரூ 116,000 (……….)

19. மேற்தரப்பட்ட தகவல்களின் சீராக்கத்தின் பின்னர், 31-03-2022ல் பங்குடமையின் தேறியலாபம் பின்வருவனவற்றுள் எது?
1) ரூ 94,000 2) ரூ 97,000 3) ரூ 100,000 4) ரூ 104,000 5) ரூ 116,000 (……….)

20. றொனி மோட்டார் வாகன பிறைவேற் Ltd ன் 31-03-2022ல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டதாகும்.

| | ரூபா "000" |
|---|---|
| 01-04-2021ல் தேறிய புத்தக பெறுமதி | 1350 |
| 31-03-2022ல் தேறிய புத்தக பெறுமதி | 1325 |
| 01-10-2021ல் புதிய மோட்டார் வாகன கொள்வனவு | 500 |
| 01-01-2022ல் மோட்டார் வாகன அகற்றல் மூலம் பெற்றகாசு | 100 |

அகற்றப்பட்ட மோட்டார் வாகனம் ரூபா 300,000ற்கு கொள்வனவு செய்யப்பட்டது. அகற்றல் மூலம் எழுந்த நட்டம் ரூ 75,000

31-03-2022ல் முடிவடைந்த ஆண்டிற்கான மோட்டார் வாகனத்தின் பெறுமானத்தேய்வு யாது?
1) ரூ 275,000 2) ரூ 25,000 3) ரூ 475,000
4) ரூ 350,000 5) ரூ 375,000 (……….)

21. கோபிகா PLC 31-03-2022ல் பின்வரும் தகவல்களை வெளிப்படுத்தியிருந்தது.

| | |
|---|---|
| நடைமுறை விகிதம் | 2:1 |
| நடைமுறை பொறுப்பு | ரூ 200,000 |
| இருப்பு | ரூ 150,000 |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

*31-03-2022ல் முடிவடைந்த ஆண்டுக்கான*
விற்பனை — ரூ *500,000*
மொத்த லாப எல்லை — *20%*
*01-04-2021ல்* இருப்பு ரூ *50,000*
விரைவு விகிதம், இருப்பு புரள்வு விகிதம் என்பன முறையே

| | விரைவு விகிதம் | இருப்பு புரள்வு விகிதம் (தடவை) |
|---|---|---|
| 1) | 0.25 | 4 |
| 2) | 1.25 | 5 |
| 3) | 1.25 | 10 |
| 4) | 2.5 | 4 |
| 5) | 1.25 | 4 |

❖ **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 22ஆம் 23ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

ஒரு கம்பனியின் 2022 மார்ச் மாதத்திற்கான சம்பளப்பட்டியலின் சுருக்கம் வருமாறு.

| | | (ரூ. "000") |
|---|---|---|
| அடிப்படைச் சம்பளம் | | 1200 |
| மேலதிக கொடுப்பனவு | | 200 |
| மொத்த சம்பளம் | | 1400 |
| கழிப்பனவு | | |
| சம்பள முற்பணம் | (100) | |
| EPF 10% | (140) | (240) |
| தொழில் தருநர் பங்களிப்பு | | 1160 |
| EPF 15% | 210 | |
| ETF 5% | 70 | 280 |

சம்பளத்துடன் தொடர்புடைய அனைத்து கொடுப்பனவுகளும் தொடர்ந்து வரும் மாதத்தின் 15ம் திகதியில் செலுத்தப்படுகின்றது.

22. 2022 மார்ச் மாதத்திற்கான வருமானக் கூற்றில் இனங்கான வேண்டிய மொத்த சம்பளச் செலவு யாது?
1) ரூ. 1400,000   2) ரூ. 1680,000   3) ரூ. 1610,000
4) ரூ. 1440,000   5) ரூ. 1160,000   (……….)

23. 31.03.2022 இல் நிதிக்கூற்றுக்களில் இனம் காணப்படும் EPF செலவு செலுத்த வேண்டிய EPF முறையே?
1) ரூ. 140,000, 210,000   2) ரூ. 210,000, 140.000   3) ரூ. 210,000, 280,000
4) ரூ. 210,000, 350,000   5) ரூ. 210,000, 420.000   (……….)

24. ஒரு வகையான பொம்மையை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றினுடைய இயந்திர மற்றும் முடிவுறுத்தல் திணைக்களம் தொடர்பான பாதிடப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.

| விபரம் | இயந்திர திணைக்களம் | முடிவுறுத்தல் திணைக்களம் |
|---|---|---|
| ஒரு அலகை உற்பத்தி செய்ய தேவைப்படும் மணித்தியாலம் | 5 இயந்திர மணித்தியாலம் | 8 ஊழிய மணித்தியாலம் |
| மேத்தலை உறிஞ்சல் வீதம் | இயந்திர மணித்தியாலம் ஒன்றிற்கு ரூ 30 | ஊழிய மணித்தியாலம் ஒன்றிற்கு ரூ 40 |

ஒரு அலகுக்ககான பாதிடப்பட்ட உற்பத்திக்கிரயம் ரூ 1000 ஓர் பொம்மையை உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் பாதிடப்பட்ட முதன்மை கிரயம் யாது?
1) ரூ 300   2) ரூ 480   3) ரூ 530   4) ரூ 470,000   5) ரூ 150,000
(……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

❖ பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 25,26,27ம் வினாக்களுக்கு விடை தருக.
31.03.2022ல் முடிவடைந்த ஆண்டிற்கான துஷி PLC யின் தகவல்கள் தரப்படுகின்றது.

| விபரம் | ரூ "000" |
|---|---|
| விற்பனை | 1400 |
| விற்பனைக் கிரயம் | 500 |
| செயற்பாட்டு செலவுகள் | 400 |
| மோட்டார் அகற்றல் லாபம் | 70 |
| இடைக்கால பங்கு லாபம் செலுத்தியது | 80 |
| மீள் மதிப்பீடு – மிகை – காணி | 150 |
| பற்றாக்குறை – கட்டிடம் | 100 |

31.03.2021ல் முடிவடைந்த ஆண்டில் கட்டிட மீள்மதிப்பீட்டில் எழுந்த மிகை ரூ 80,000 கணக்கிலிடப்பட்டுள்ளது. காணியானது.
31.03.2022ல் முடிவடைந்த ஆண்டில் முதல் தடவை மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது

25. இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 01ற்கு அமைவாக 31.03.2022ல் முடிவடையும் நிதி ஆண்டிற்கான மொத்த வருமானம், மொத்த செலவினமாக இனம் காணப்படுவது.

| | மொத்த வருமானம் ரூ 000 | மொத்த செலவினம் ரூ 000 |
|---|---|---|
| 1) | 1620 | 1000 |
| 2) | 1620 | 1080 |
| 3) | 1700 | 1000 |
| 4) | 1520 | 1080 |
| 5) | 1520 | 930 |

26. 31.03.2022ல் முடிவடைந்த ஆண்டிற்கான லாபமும், ஏனைய முற்றுமடங்கிய வருமானமாகவும் இனம்காண வேண்டிய தொகைகள் முறையே.

| | லாபம் ரூ "000" | ஏனைய முற்றுமடங்கிய வருமானம் ரூ "000" |
|---|---|---|
| 1) | 570 | 150 |
| 2) | 620 | 130 |
| 3) | 550 | 50 |
| 4) | 620 | 70 |
| 5) | 550 | 70 |

27. LKAS 01 ன் அடிப்படையில் 31.03.2022ல் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த முற்றுமடங்கிய வருமானமும், நிறுத்தி வைத்த வருமானமும் முறையே.

| | மொத்த முற்று மடங்கிய வருமானம் ரூ "000" | நிறுத்தி வைத்த வருமானம் ரூ "000" |
|---|---|---|
| 1) | 620 | 550 |
| 2) | 640 | 470 |
| 3) | 620 | 470 |
| 4) | 640 | 550 |
| 5) | 720 | 570 |

28. பின்வரும் தகவல்கள் ஓர் உற்பத்தி பொருளுடன் தொடர்புபட்டவையாகும் மொத்தப்பங்களிப்பின் பெறுமதியினை காண்க.
நிலையான செலவு ரூ 500,000
பாதுகாப்பு எல்லை ரூ 250,000
பங்களிப்பு விற்பனை வீதம் 40%

1) ரூ 600,000 2) ரூ 100,000 3) ரூ 500,000
4) ரூ 350,000 5) ரூ 250,000 (……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

29. நிலையான செலவு தொடர்ந்து மாறாதிருக்கையில் அலகுக்கான விற்பனை விலையும், அலகுக்கான மாறும் செலவும் 20% ஆல் குறைவடைகின்றது. எனின் பின்வருவனவற்றில் எது அலகுக்கான பங்களிப்பினதும், பங்களிப்பு விற்பனை வீதத்தினதும் விளைவாக அமைவது.

| | அலகுக்கான பங்களிப்பு | பங்களிப்பு விற்பனை வீதம் |
|---|---|---|
| 1) | குறைவடையும் | மாறாது |
| 2) | குறைவடையும் | குறைவடையும் |
| 3) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 4) | மாறாது | மாறாது |
| 5) | குறைவடையும் | அதிகரிக்கும் |

(……….)

30. ஏனைய காரணிகள் மாறாதிருக்கையில், பின்வருவனவற்றில் எது செயற்றிட்டத்தின் தேறிய இற்றைப் பெறுமதியினை குறைவடைய செய்யும் காரணியாக அமையும்.

A. கழிவு காரணி வீதம் குறைவடைதல்.

B. கழிவு காரணி வீதம் அதிகரித்தல்.

C. ஆரம்ப முதலீடு குறைவடைதல்.

D. தேறிய செயற்பாட்டு காசு உட்பாய்ச்சல் குறைவடைதல்.

1) A,C 2) B,D 3) A,B,D 4) B,C 5) A,B,C,D (……….)

❖ **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடையைப் புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.**

31. 01.04.2021ல் ஆருஷ் ரூ 400,000 னை ஈடுபடுத்தி வணிக நிறுவனத்தை ஆரம்பித்தார். மேலும் ரூ 180,000 பெறுமதியான நிழற் பிரதி இயந்திரம் ஒன்றை கொண்டு வந்தார். 31.03.2022ல் முடிவடைந்த நிதியாண்டில் நிறுவனத்தினால் உழைக்கப்பட்ட வருமானம், செலவு முறையே ரூ 200.000, 140.000 ஆண்டில் சொந்த தேவைக்காக எடுத்தகாசு ரூ 25,000

1) 01.04.2021ல் உரிமையை அதிகரிக்க கூடிய நடவடிக்கைகள் 2 பெறுமதியுடன் தருக.

……………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………..

2) 31.03.2022ல் உள்ளவாறான நிறுவனத்தின் தேறிய சொத்தினை கணிப்பிடுக.

……………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………..

32. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களினால் சொத்து, பொறுப்பு, உரிமை என்பனவற்றின் மீது அதிகரிப்பு அல்லது குறைவு அல்லது மாற்றமின்மை எனும் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தும் என கூறுக.

| கொடுக்கல் வாங்கல்கள் | சொத்து | பொறுப்பு | உரிமை |
|---|---|---|---|
| A. கடன்பட்டோரிடம் பெற்றகாசு | | | |
| B. ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு | | | |
| C. குத்தகை தவணைக்கட்டணம் செலுத்தியது | | | |
| D. இடைக்கால பங்கு லாபம் செலுத்தியது | | | |

33. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கான மூல ஏடு, மூல ஆவணங்களைப் பெயரிடுக.

| **கொடுக்கல் வாங்கல்கள்** | **மூல ஆவணம்** | **மூல ஏடு** |
|---|---|---|
| A. வழங்குனருக்கு திருப்பி அனுப்பிய பொருள்கள் | | |
| B. நடைமுறை அல்லாத சொத்து காசு கொள்வனவு | | |
| C. இருப்புக்கள் கடனுக்கு விற்பனை | | |
| D. அகற்றப்பட்ட சொத்தின் திரண்ட பெறுமானத் தேய்வு | | |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

34. சொத்துக்களுக்கான கணக்குவைத்தலின் போது வரலாற்றுக்கிரய எண்ணக்கரு மீறப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக.

……………………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………………

❖ **35, 36ம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவலினை பயன்படுத்துக**.

ஸ்ரீ லங்கா ரெலிகொம் நெட்வேர்க் PLC நெட்வேர்க் சேவர் ஒன்றை விற்பனை செய்வதற்கும் விற்பனைக்குப் பின்னர் முதல் 05 வருட காலப்பகுதியில் பராமரிப்பு சேவையை வழங்குவதற்குமாக 01.04.2021ல் வாடிக்கையாளர் ஒருவருடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தியிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் கொடுக்கல் வாங்கல் விலை ரூபா 400,000 ஆனால் நெட்வேர்க் சேவரின் சந்தை விலை 300,000 05 வருட கால பராமரிப்பு சேவைக்கான கட்டணம் ரூ 200,000 ஆகும். முதலாவது பராமரிப்பு சேவை 31.03.2022ல் வழங்கப்பட்டிருந்தது. 01.04.2021ல் நெட்வேர்க் சேவர் உரிய முறைப்படி நிறுவப்பட்டு பாவனைக்குரியவாறு காணப்பட்டது.

35. 31.03.2022ல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்றில் இனம்கான வேண்டிய வருமானம் யாது?

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

36. 31.03.2022ல் உழைக்கப்படாத வருமானம் யாது?

……………………………………………………………………………………………………………

37. LKAS 37ன் படி (ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்பு, நிகழத்தக்க சொத்துக்கள்) கீழே குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் ஏனைய பொறுப்புக்களின் குணாதிசயங்களின் இயல்பினை அடைப்புக்குறிக்குள் உள்ளடக்கப்பட்ட விடயத்தின் சரியான சொல்லைத் தெரிவு செய்க.

| குணாதிசயங்கள் | ஏற்பாடுகள் | ஏனைய பொறுப்புக்கள் |
|---|---|---|
| A. நிகழ்கால கடப்பாடு காணப்படல் (ஆம்/இல்லை) | | |
| B. செலுத்த வேண்டிய தொகை (நிச்சயமானது/ நிச்சயமற்றது) | | |
| C. தீர்க்க எடுக்கும் காலம் (நிச்சயமானது/ நிச்சயமற்றது) | | |

38. நிதிக்கூற்றுக்களின் எண்ணக்கரு சார் சட்டகத்தின் படி கணக்கீட்டுத் தகவல்களின் தர ரீதியான பண்புகளை பட்டியல்படுத்துக.

1) ………………………………………… அ) …………………………………………

ஆ) …………………………………………

2) ………………………………………… அ) ………………………………………..

ஆ) …………………………………………

இ) …………………………………………

ஈ) ………………………………………..

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

❖ **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 39,40ம் வினாக்களுக்கு விடை தருக.**

நிறுவனம் தனது எல்லா கொடுக்கல் வாங்கல்களையும் வங்கி நடைமுறைக்கணக்கினூடாக மேற்கொள்கின்றது.

2022 மார்ச் மாதத்திற்கான காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கின் சுருக்கம்

| விபரம் | ரூ "000" |
|---|---|
| 01.03.2022ல் காசு மீதி | 200 |
| 31.03.2022 காசுப் பெறுவனவு நாளேட்டின் மொத்தம் | 1500 |
| 31.03.2022 காசுக் கொடுப்பனவு நாளேட்டின் மொத்தம் | 1200 |

2022 மார்ச் மாதத்திற்கான வங்கிக் கூற்றின் சுருக்கம் 10.04.2022ல் பெற்றுக்கொள்ளப்பட்டது.

| விபரம் | ரூ "000" |
|---|---|
| 01.03.2022ல் மீதி | 200 |
| வசூலிக்கப்பட்ட காசோலை | 1300 |
| மாற்றப்பட்ட காசோலை | 1000 |
| நேரடியாக செலவு வைக்கப்பட்ட நிலையான வைப்பு வட்டி | 250 |
| நிலையான கட்டளைக் கொடுப்பனவு தொலைபேசி | 100 |

வங்கிக் கூற்று கிடைத்த பின்னர் நிலையான வைப்புக்கான வட்டி, நிலையான கட்டளைக் கொடுப்பனவுக்கான பதிவுகள் காசுக் கட்டுப்பாட்டு கணக்கில் பதியப்படுகின்றது.

01.03.2022ல் மாற்றப்படாத காசோலையோ, வசூலிக்கப்படாத காசோலைகளோ எதுவும் காணப்படவில்லை.

39. 31.03.2022ல் சீராக்கிய காசுக்கட்டுப்பாட்டு கணக்கின் மீதி யாது?

.................................................................................................................

40. அ) 31.03.2022ல் வங்கி கூற்று மீதியினை காண்க.

.................................................................................................................

.................................................................................................................

ஆ) 31.03.2022ல் சீராக்கிய காசுக்கட்டுப்பாட்டு கணக்கினதும் வங்கி கூற்று மீதியும் வேறுபாட்டுக்கான காரணங்களை பெறுமதியுடன் குறிப்பிடுக.

.................................................................................................................

.................................................................................................................

41. ஒரு நிறுவனத்தின் பொது நாட்குறிப்போட்டில் பதிவிடக்கூடிய ஆதனம், பொறி மற்றும் உபகரணத்துடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளை தருக.

1) .................................................................................................................
2) .................................................................................................................
3) .................................................................................................................
4) .................................................................................................................

42. LKAS 07ன் படி பிரணவன் PLC யின் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் எந்த நடவடிக்கையின் கீழ் பட்டியல்படுத்தப்படும் என்பதனை குறிப்பிடுக.

| கொடுக்கல் வாங்கல்கள் | நடவடிக்கைகள் |
|---|---|
| 1) பணத்தை நிலையான வைப்பிலிடல் | |
| 2) வருமான வரி செலுத்தப்பட்டது. | |
| 3) பெற்ற பங்கு லாபம் | |
| 4) உரிமை பங்கு வழங்கல் | |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

43. 31.03.2022ல் முடிவடைந்த அறிக்கையிடும் காலத்திற்கான குரு PLC யின் தகவல்கள் வருமாறு

| விபரம் | |
|---|---|
| கடன் விற்பனை | 1460,000 |
| கடன் பட்டோர் சேகரிப்பு காலம் | 05 நாட்கள் |
| இருப்பு புரள்வு வீதம் | 20 தடவைகள் |
| மொத்த லாப வீதம் | 25% |

வருடத்தில் 365 நாட்கள் எனக் கொள்க.
பின்வருவனவற்றை கணிப்படுக.

1) சராசரி இருப்பு ……………………………………………………………………………….

2) சராசரிக் கடன்பட்டோர் ………………………………………………………………………..

44. உற்பத்தி கம்பனியொன்றின் கிரய தரவுகள் தரப்படுகின்றது.

நேர் மூலப் பொருள் அலகொன்றிற்கு ரூ 20
நேர் கூலி அலகொன்றிற்கு ரூ 30
மாறும் மேந்தலை – உற்பத்தி அலகொன்றிற்கு ரூ 15
- உற்பத்தியல்லாதது அலகொன்றிற்கு ரூ 10
நிலையான மேந்தலை – உற்பத்தி ரூ 80,000
- உற்பத்தியல்லாதது ரூ 40,000

இலக்கு உற்பத்தி மட்டம் 5000 அலகுகளில் பின்வரும் விடயங்களை மதிப்பிடுக.

1) மொத்த உற்பத்தி மேந்தலை ரூ ………………………………………………………………...

2) மொத்த மேந்தலை ரூ ……………………………………………………………………………

45. 31.03.2022ல் முடிவடைந்த ஆண்டிற்கான காலத்திற்கான சபிதா உற்பத்தி நிறுவனத்தில் இருந்து மூலப்பொருளுடன் தொடர்புபட்ட தகவல்கள் வருமாறு.

காலாண்டுக்கான கேள்வி 8000 அலகுகள்
ஓர் கட்டளைக்கான கட்டளைச் செலவு ரூ 25
ஓர் அலகை வைத்திருப்பதற்கான செலவு ரூ 10
பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

1) (EOQ) சிக்கன கட்டளைத் தொகை? ………………………………………………………………

2) வருடத்திற்கான கட்டளைகளின் எண்ணிக்கை? …………………………………………………….

46. கம்பனி 01.04.2021ல் குத்தகைக்கம்பனியுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டது. சொத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையும் அதன் பயன்தரு ஆயுட்காலமும் முறையே ரூ 5960,000, 5 வருடங்கள் குத்தகை ஒப்பந்தம் தொடர்பாக, குத்தகைக்காலம் 5 வருடங்கள் ஆரம்பக்கட்டணம் ரூ 2500,000 01.04.2021ல் செலுத்தப்பட்டது.
31.03.2022ல் 1வது குத்தகைத் தவணைக் கட்டனம் ரூ 1250,000 செலுத்தப்பட்டது. 31.03.2022, 31.03.2023ல் முடிவடையும் வருடத்திற்கான குத்தகை வட்டிகள் முறையே ரூ 346,000, 256,000
பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

1) 31.03.2022ல் குத்தகைக்கட்டன கொடுப்பனவுக்கான கடப்பாடு யாது?

………………………………………………………………………………………………..

………………………………………………………………………………………………..

2) 31.03.2022ல் நிதி நிலமைக் கூற்றில் நடைமுறை அல்லாச் சொத்தாக இனம் காணப்படும் சொத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமை யாது?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

47. கம்பனியொன்றின் பின்வரும் தகவல்கள் உற்பத்தி பொருளொன்றுடன் தொடர்புபட்டவைகளாகும்.

| திகதி | விபரம் |
|---|---|
| 01.10.2022 | இருப்புக்கள் ஒவ்வொன்றும் ரூ 5 ஆன 1000 அலகுகள் |
| 05.10.2022 | கொள்வனவு ஒவ்வொன்றும் ரூ 6 ஆன 1500 அலகுகள் |
| 12.10.2022 | கொள்வனவு ஒவ்வொன்றும் ரூ 8 ஆன 500 அலகுகள் |
| 28.10.2022 | விற்பனை ஒவ்வொன்றும் ரூ 55ப் படி 2000 அலகுகள் |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

பின்வரும் ஒவ்வொரு விலையிடல் அடிப்படையிலும் தரப்பட்ட இருப்பின் பெறுமதியினை கணிப்பிடுக.

| விலையிடல் முறை | 2022 ஒக்ரோபர் மாதத்துக்கான விற்பனைக் கிரயம் (ரூ) | 31.10.2022ல் இறுதியிருப்பு (ரூ) |
|---|---|---|
| 1) முதல் உள் முதல் வெளி முறை | | |
| 2) நிறையளிக்கப்பட்ட சராசரி | | |

48. காசினி தனியார் கம்பனியின் 01.04.2021ல் பிரித்தெடுக்கப்பட்ட மீதிகள் வருமாறு.

| | ரூ "000" |
|---|---|
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் (100,000 பங்குகள்) | 2000 |
| நிறுத்திவைத்த லாபம் | 600 |

30.06.2021ல் நிறுத்தி வைத்த வருவாயை மூலதனமாக்கும் நோக்குடன் ரூ 20 விலையில் ரூ400000 நிறுத்தி வைத்த வருவாய் மூலதனமாக்கப்பட்டது. 30.10.2021ல் கம்பனி 12 பங்குகளை வைத்திருக்கும் ஒவ்வொரு பங்குதாரருக்கும், 1 பங்கு என்ற அடிப்படையில் உரிமை வழங்கலை செய்தது. உரிமை பங்கொன்றின் பிரதிபயனாக ரூபா 10 பெற்றுக்கொள்ளப்பட்டது. இருக்கின்ற அனைத்து பங்குதாரர்களும் தமது உரிமையைப் பயன்படுத்தியிருந்தார்கள்.
31.03.2022ல் முடிவடைந்த அறிக்கையிடும் காலத்திற்கான இலாபம் ரூ 250,000
பின்வருவனவற்றை கணிப்பிடுக.

1) மேலே குறிப்பிடப்பட்ட பங்கு வழங்கல்கள் மூலம் காசுக் கணக்கில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ……………………………………………..

2) 31.03.2022ல் உரிமையாண்மை ரூ ……………………………………………………………….

49. உற்பத்தி நிறுவனத்துடன் தொடர்புடைய பாதிடப்பட்ட வருமானமும், கிரயமும் பின்வருமாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
விற்பனை 40000 அலகுகள்
அலகுக்கான விற்பனை விலை ரூ 20
பங்களிப்பு விற்பனை வீதம் ரூ 40%
நிலையான செலவு ரூ 200,000
பின்வருவனவற்றை கணிப்பிடுக.

1) இலாப/ நட்டமற்ற புள்ளி ரூபாவில் …………………………………………………………………

2) பாதிடப்பட்ட விற்பனை அலகுகளில் லாபம் ……………………………………………………..

50. கம்பனியொன்று பாவனையிலுள்ள இயந்திரத்தை மாற்றீடு செய்வதற்காக புதிய இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு தீர்மானமெடுக்கின்றது. இதற்காக சந்தை ஆராய்ச்சி செலவாக ரூ 70,000 ஏற்பட்டது. மேலும் பின்வரும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

| | |
|---|---|
| புதிய இயந்திரத்தின் கிரயம் | ரூ 800,000 |
| பழைய இயந்திரத்தின் அகற்றல் விலை | ரூ 200,000 |
| மேலதிக தொழிற்படு மூலதனம் | ரூ 100,000 |
| புதிய இயந்திரத்தின் திரும்பலளித்தல் காலம் | 4 வருடங்கள் |
| புதிய இயந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம் | 5 வருடங்கள் |

தேறிய வருடாந்த செயற்பாட்டு காசு உட்பாய்ச்சல் சமமாக இருக்கின்றது எனக் கருதுக.
பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

1) ஆரம்ப தேறிய காசுப் பாய்ச்சல்?………………………………………………………………

2) வருடாந்தம் எதிர்பார்க்கப்படுகின்ற தேறிய செயற்பாட்டு காசு உட்பாய்ச்சல் ரூ…………………………………

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Examination - 2022

| | | | | |
|---|---|---|---|---|
| கணக்கீடு II<br>Accounting II | Three Hours<br>Gr -13 (2022) | 33 | T | II |

**அறிவுறுத்தல்கள்:**

- ❖ முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ❖ ஒவ்வொரு வினாவுக்கும் புதிய தாளில் விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.
- ❖ உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.
- ❖ இவ்வினாத்தாளுக்கு 200 புள்ளிகள் வழங்கப்படும்.

### பகுதி - II

**01)** கேனு தனியார் கம்பனியின் 31/03/2022ல் முடிவடைந்த அறிக்கையிடும் காலத்திற்கான பரீட்சைமீதி தரப்படுகின்றது.

| விபரம் | வரவு ‘000’ | செலவு ‘000’ |
|---|---|---|
| ஆதனம்பொறி மற்றும் உபகரணம் தேறிய பெறுமதி | 47000 | |
| கொள்வனவு | 41000 | |
| வியாபார வருமதியாளன் | 21000 | |
| 01/04/2021 இருப்புக்கள் | 9500 | |
| காசும் காசுக்கு சமனானவை | 5200 | |
| நிர்வாகசெலவு | 8000 | |
| விநியோக செலவு | 9450 | |
| செலுத்திய வருமான வரி | 1200 | |
| விற்பனை | | 85000 |
| வியாபார சென்மதியாளன் | | 11000 |
| 01/04/2021ல் விற்பனை உத்தரவாத ஏற்பாடு | | 550 |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரன பங்கு | | 30000 |
| 01/04/2021ல் மீள்மதிப்பீட்டு மிகை – காணி | | 1500 |
| 01/04/2021ல் நிறுத்திவைத்த வருவாய் | | 6500 |
| 01/04/2021ல் வருமான வரி ஏற்பாடு | | 300 |
| வங்கிக் கடன் | | 10000 |
| குத்தகை கொடுப்பனவு கணக்கு | 2500 | |
| | 144850 | 144850 |

31/03/2022ல் முடிவடைந்த அறிக்கையிடும் காலத்திற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கையில் பின்வரும் சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும்.

i) 31/03/2022 இல் இருப்புக்களானது பின்வருமாறு வகைகளைக் கொண்டுள்ளது அவற்றின் கிரயம், தேறிய நிகரப்பெறுமதிகளானவ தரப்படுகின்றது.

| உருப்படி | கிரயம் ரூ ‘000’ | தேறிய நிகரப்பெறுமதி ரூ ‘000’ |
|---|---|---|
| அங்கர் | 3800 | 3400 |
| பிஸ்கட் | 2600 | 2700 |
| அரிசி | 3600 | 3700 |
| | 10000 | 9800 |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

ii) கம்பனியின் தொலைபேசிக் கட்டனம் ரூ 200,000 இயக்குனரால் செலுத்தப்பட்டது. கம்பனியால் இக்கட்டனம் மீள்நிரப்பப்பட்டு தவறுதலாக இயக்குனர் கொடுப்பனவுக்குள் பதியப்பட்டுள்ளது.

iii) பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்ட நிர்வாக செலவினுள் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| | ரூபா '000' |
|---|---:|
| ஊழியர் சம்பளம் | 2250 |
| இயக்குனர் கொடுப்பனவு | 1500 |
| பெறுமானத் தேய்வு | 3400 |
| கணக்காய்வுக் கட்டணம் | 250 |
| ஏனைய நிர்வாக செலவு | 600 |
| | 8000 |

iv) 01/03/2022ல் கம்பனி வாடிக்கையாளர் ஒருவருடன் பொருட்களை விற்பனை செய்வதற்கும், விற்பனையின் பின் 3 மாதகால சேவையினை வழங்குவதற்கும் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டது. ஒப்பந்தத்தின் மொத்த விற்பனை விலை ரூ 1200,000 இதில் ரூ 1000,000 பொருட்களை விற்பனை செய்வதற்கும் மிகுதி விற்பனையின் பின் சேவைக்காகவும் நிர்ணயிக்கப்பட்டது. கம்பனி ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருட்களை 31/03/2022ல் விற்பனை செய்தது. மொத்த பிரதிபயனையும் காசாக பெற்றுக்கொள்ளப்பட்டு விற்பனைக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.

v) ஆதனம் பொறி மற்றும் உபகரணம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு எல்லா உருப்படிகளும் ஆயிரத்தில் தரப்படுகின்றது. ('000')

| விபரம் | கிரயம்/பெறுமதி 01/04/2022ல் | நிதியாண்டில் கொள்வனவு | நிகழாண்டு பெறுமானத் தேய்வு | 31/03/2022ல் பெறுமானத் தேய்வு ஏற்பாடு | 31/03/2022 ல் தேறிய புத்தக பெறுமதி |
|---|---:|---:|---:|---:|---:|
| காணி | 21000 | - | - | - | 21000 |
| கட்டிடம் | 9000 | 5000 | 700 | 2000 | 12000 |
| தளபாடம் | 8000 | 4000 | 1200 | 3000 | 9000 |
| அலுவலக உபகரணம் | 7500 | - | 1500 | 2500 | 5000 |
| | 45500 | 9000 | 3400 | 7500 | 47000 |

31/03/2018 இல் காணி முதல் தடவையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்ட போது எழுந்த மீள்மதிப்பீட்டு மிகை பரீட்சைமீதியில் காணி மீள்மதிப்பீட்டு மிகையாக பிரதிபலிக்கின்றது. காணி இரண்டாம் தடவையாக 31/03/2022ல் ரூபா 19000,000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டது எனினும் ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை

நிதியாண்டில் 1/07/2021 லும் 1/10/2021லும் கட்டிடம், தளபாடம் என்பன முறையே கொள்வனவு செய்யப்பட்டது. நடைமுறை ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு கணிப்பிடும்போது தவறுதலாக ஆண்டின் இறுதிக் கிரயத்தின் மீது பெறுமானத்தேய்விடப்பட்டுள்ளது கொள்வனவத் திகதி கவனத்திற்கொள்ளப்படவில்லை.

ஆதனம் பொறி மற்றும் உபகரணம் வருடாந்தம் நேர்கோட்டடிப்படையில் பின்வருமாறு பெறுமானத் தேய்விடப்படுகின்றது.

கட்டிடம் 5%

தளபாடம் 10%

அலுவலக உபகரணம் 20%

மோட்டார் வாகனம் பொருட்களை விநியோகம் செய்வதற்காக பயன்படுத்தப்படுகின்றது ஏனைய சொத்துக்கள் நிர்வாக தேவைக்காக பயன்படுத்தப்படுகின்றது.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

vi) கம்பனி பொருட்களை *1* வருட உத்தரவாதத்துடன் விற்பனை செய்கின்றது. கம்பனி ரூ *400,000* ஐ கடந்த வருடத்தில் மேற்கொண்ட விற்பனை உத்தரவாதத்திற்காக நிகழாண்டில் செலுத்தியிருந்தது இது நடைமுறை ஆண்டின் விநியோகக் கிரயத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. 31/03/2022ல் விற்பனை உத்தவாதத்திற்கான ஏற்பாடக ரூபா 750,000 மதிப்பிடப்பட்டுள்ளது.

vii) 01/04/2021ல் கம்பனி குத்தகை ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டு மோட்டார் வாகனத்தை பயன்படுத்துவதற்கான உரிமையினை பெற்றுக் கொண்டது. குத்தகைகாலம் *5* வருடங்கள் இதன் சொத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையின் கிரயம், பயன்தரு ஆயுட்காலமும் முறையே ரூ5000,000 05 வருடங்கள் குத்தகை ஒப்பந்தத்தின்படி ஆரம்ப கட்டணமாக ரூபா 1500,000 01/04/2021 ல் செலுத்தப்பட்டது. மேலும் 31/03/2022ல் முதலாவது தவணைக்கட்டனம் ரூ *1000,000* செலுத்தப்பட்டது. 31/03/2022, 3/03/2023ல் முடிவடையும் வருடங்களுக்கான குத்தகை வட்டிகள் முறையே ரூ 500,000 ரூ *400,000*. கம்பனியால் ஆரம்பக்கட்டனம், முதலாவது தவனைக்கட்டனம் மட்டும் செலுத்தப்பட்டு குத்தகை கொடுப்பனவு கணக்கில் பதியப்பட்டது தவிர ஏனைய பதிவுகள் ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

viii) செலுத்திய வருமான வரியானது சென்ற ஆண்டுக்காக செலுத்திய வருமான வரி ரூபா 400,000 ஐயும் மிகுதி நடைமுறை வருடத்திற்கான முதல் மூன்று காலாண்டுக்காவும் செலுத்தப்பட்டது. நடைமுறை வருடத்திற்கான இறுதிக் கலாண்டு வருமான வரி ரூபா 300,000 என மதிப்பிடப்பட்டது இச்சீராக்கம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட வேண்டும்.

வேண்டப்படுவது

LKAS -1 இன் அடிப்படையில் பின்வரும் நிதிக்கூற்றுக்களை (குறிப்புக்கள் உள்ளடங்களாக) கேனு PLC க்காக தயாரிக்க வேண்டப்படுகிறது.

i. 31/03/2022 ல் முடிவடைந்த அறிக்கையிடும் காலத்திற்கான இலாபம் / நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமான கூற்று
ii. 31/03/2022 ல் முடிவடைந்த அறிக்கையிடும் காலத்திற்கான உரிமை மாற்றல்கூற்று
iii. 31/03/2022 ல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்று

**02)** *அ)* பாதணிகளை உற்பத்திசெய்யும் மது கம்பனியானது இரண்டு உற்பத்திப் பகுதிகளையும் பராமரிப்புச் செயற்பாடுகளிற்காக சேவைப்பகுதி ஒன்றையும் கொண்டுள்ளது. *5000* அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் அடுத்த வருடத்திற்கான பாதிடப்பட்ட தகவல்கள் பின்வருமாறு

| விபரம் | மொத்தம் | உற்பத்திப் பகுதி A | உற்பத்திப் பகுதிB | பராமரித்தல் பகுதி |
|---|---|---|---|---|
| நேரில் கூலிகள் (ரூ) | 75,000 | 46,000 | 13,000 | 16,000 |
| இயந்திரப்பெறுமானத்தேய்வு ரூ | 30,000 | 20,000 | 10,000 | - |
| வாடகை ரூ | 90,000 | ? | ? | ? |
| பாதுகாப்பு கட்டணங்கள் ரூ | 45,000 | ? | ? | ? |
| மின்சாரம் ரூ | 80,000 | ? | ? | ? |
| இயந்திர மணித்தியாலங்கள் | 15,000 | 10,000 | 5,000 | - |
| ஊழிய மணித்தியாலங்கள் | 14,000 | 2,000 | 12,000 | - |
| தளப்பரப்பு (சதுரமீற்றர்) | 9,000 | 3,800 | 3,600 | 1,600 |
| பாதுகாப்பு ஊழியர் எண்ணிக்கை | 15 | 7 | 7 | 1 |
| கிலோவார் மணித்தியாலங்கள் | 1,600 | 1,000 | 500 | 100 |

மேலதிக தகவல்கள்

1. பராமரிப்புப் பகுதியின் மொத்த மேந்தலைக் கிரயமானது உற்பத்தி பகுதி – A உற்பத்தி பகுதி B ஆகியவற்றுக்கிடையில் முறையே 5:3 என்ற விகிதத்தில் மீள் பகிர்வுச் செய்யப்படல் வேண்டும்.
2. மேந்தலைகளை உறிஞ்சுவதற்கு உற்பத்தி பகுதி A ஆனது இயந்திர மணித்தியாலங்களையும் உற்பத்திப்பகுதி B ஆனது ஊழிய மணித்தியாலங்களையும் பயன்படுத்துகின்றது.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

3. பாதனிச் சோடி ஒன்றை உற்பத்தி செய்வதற்கு உற்பத்திப் பகுதி A உற்பத்திப்பகுதி B ஆகியவற்றில் முறையே 5 மணித்தியாலாங்களும் 3 மணித்தியாலங்களும் செலவழிக்கப்படுகிறது.
4. பாதணிச் சோடி ஒன்றை உற்பத்தி செய்வதற்கான நேர்க்கிரயங்கள்
   மூலப்பொருள் - சோடியொன்றுக்கு ரூ 30
   ஊழியம் - சோடியொன்றுக்கு ரூ 20
5. உற்பத்தியல்லா மேந்தலைகள்
   மாறும் மேந்தலைகள் சோடியொன்றுக்கு ரூ 25
   நிலையான மேந்தலைகள் ரூ 105,000

வேண்டப்படுவது

1. பகிர்வு அடிப்படைகளின் பெயர்களை உள்ளடக்கிய மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை
2. ஒவ்வோர் உற்பத்திப் பகுதிக்குமான மேந்தலை உறிஞ்சல் வீதங்கள்
3. பாதனிச்சோடியொன்றுக்கான உற்பத்திக்கிரயம்.
4. 5000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் மொத்தக்கிரயம்.

(புள்ளிகள் 25)

ஆ) யாழ்ப்பாணத்திலுள்ள முன்நிலையினை வகிக்கும் தனியார் பாடசாலை புதிய "நெட்வேர்க் சேவர்" ஒன்றினை மாற்றீடு செய்வது தொடர்பாக புதிய தொழில்நுட்பத்தின் அடிப்படையில் தீர்மானமெடுத்துள்ளது இப்புதிய சேவர் ஐ கொள்வனவு செய்யும் போது பாவனையிலுள்ள பழைய சேவரை விற்பனை செய்ய முடியும் இதன் விற்பனைப்பெறுமதி ரூ 300,000

பாதிடப்பட்ட புதிய நெட்வேர்க்சேவரின் காசுஉட்பாய்ச்சல்வெளிப்பாய்ச்சல்கள் பின்வருமாறு

| | ரூ '000' |
|---|---|
| சேவரின் கொள்விலை | 1600 |
| போக்குவரத்து செலவு | 360 |
| நிர்மானித்தல் செலவு | 120 |
| ஆயுட்காலத்தின் இறுதியில் எஞ்சிய பெறுமதி | 80 |

செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் தேவைப்படும்தொழிற்படு மூலதனத்தில் ஏற்படும் அதிகரிப்பு ரூ300,000 மேலதிகமாக தேவைப்படும் தெழிற்படு மூலதனம் செயற்றிட்டத்தின் இறுதியில் மீளப்பெற்றுக் கொள்ளப்படும். புதிய நெட்வேர்க் சேவரின் ஆயுட்காலம் 05 வருடங்கள் இப்புதிய சேவர் கொள்வனவு செய்யப்படுமாயின் வருமான வரிக்குப் பின்இலாபம் வருடம் ரூபா 240,000 னால் அதிகரிக்கும்.

எதிர்பார்க்கப்படும் வருவாய் வீதம் 10% இதன் கழிவுக் காரணி கிட்டிய 2 தசமதானத்திற்கு பின்வருமாறு தரப்படுகிறது.

| வருடம் | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|
| கழிவு காரணி | 1.0 | 0.91 | 0.83 | 0.75 | 0.68 | 0.62 |

வேண்டப்படுவது

1. செயல்திட்டத்தின் ஒவ்வொரு வருடத்திற்குமான காசு உட்பாய்ச்சலையும், காசு வெளிப்பாய்ச்சலையும் பட்டியல் படுத்துக.
2. செயற்றிட்டத்தின் தேறிய காசுப்பாய்ச்சல்
3. தேறிய இன்றைய பெறுமதியின் அடிப்படையில் இச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த முடியுமா என ஆலோசனை கூறுக.

(புள்ளிகள் 15)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**03)** 30/04/2022 ல் முடிவடைந்த மாதத்திற்கான செந்தூரன் நிறுவனத்தின் தகவல்கள் வருமாறு.

01/04/2022 ல் நிதிநிலமைக்கூற்று ரூ '000'

| | | |
|---|---|---|
| நடைமுறை அல்லாத சொத்து | | |
| தளபாடம் கிரயம் ரூ 400000 | | 280 |
| மோட்டார் வாகனம் கிரயம் ரூ 300,000 | | 240 |
| | | 520 |
| நடைமுறைச்சொத்தது | | |
| இருப்பு | | 100 |
| வியாபார வருமதியாளன் | 80 | |
| எதிர்பார்க்கை நட்டத்திற்கான படிகள் | (8) | 72 |
| வங்கி | | 108 |
| | | 800 |
| உரிமை | 370 | |
| தேறியலாபம் | 140 | 510 |
| நடைமுறை அல்லாத பொறுப்பு | | |
| வங்கிக்கடன் | | 200 |
| நடைமுறைப் பொறுப்பு | | |
| செலுத்தவேண்டிய மின்சாரம் | | 8 |
| வியாபார சென்மதியாளன் | | 82 |
| | | 800 |

நிறுவனத்தின் எல்லா கொடுக்கல் வாங்கல்களும் வங்கியின் நடைமுறைக் கணக்கினூடாக மேற்கொள்ளப்படுகின்றது பின்வரும் கொடுக்கல் வாங்கல் 2022 ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்றன

i. உபகரணம் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது ரூ 240,000 அந்த கடன் 01/04/2022 ல் இருந்து 5 வருடங்களில் கொடுத்து தீர்க்கப்படும்.

ii. மீள்விற்பனை நோக்கம் கருதிய பொருட்கள் ரூ 120,000ற்கு கொள்வனவு செய்யப்பட்டு ரூ 40000 செலுத்தப்பட்டது மிகுதி ஒரு மாதகாலத்தில் கொடுத்து தீர்க்கப்படும்.

iii. இருப்புக்கள் காசுக்கு விற்பனை ரூ 100,000 விற்கப்பட்ட இருப்பின் கிரயம் ரூ 60,000

iv. நிறுவனத்தினால் உரிமையாளரின் மகனின் போக்குவரத்து பருவகாலச் சீட்டக்காக செலுத்தப்பட்டது. ரூ 10,000

v. வியாபார வருமதியாளனிடம் ரூ 5,000 கழிவு அனுமதிக்கப்பட்டு ரூ35,000 பெற்றுக்கொள்ளப்பட்டது.

vi. 01/04/2022 ல் செலுத்தவேண்டிய மின்கட்டணம் செலுத்தப்பட்டது 2022 ஏப்ரல் மாதத்திற்கான மின்பட்டியல் ரூ 12000 பெற்றுக்கொள்ளப்பட்டது.

vii. வங்கிக்கடனுக்கான தவணைக் கட்டணம் ரூபா 12000 செலுத்தப்பட்டுள்ளது இத்தவணைக்கட்டனம் ரூ 2000 வட்டியினை உள்ளடக்கியுள்ளது.

viii. வியாபார வருமதியாளன் மீதான எதிர்பார்க்கை நட்டமாக ரூ2000 பதிவழிப்பு செய்யப்பட வேண்டும். மேலும் எதிர்பார்க்கை நட்டத்திற்கான படிகள் 10% ஆக இறுதி வியாபார வருமதியாளன் மீது சீராக்கம் செய்யப்படவேண்டும்.

ix. இருப்புக்கள் கடனுக்கு ரூ 60000க்கு கொள்வனவு செய்யப்பட்டது. செலுத்தப்படவேண்டிய இக்கடன் 4 மாதத்தினுள் செலுத்தப்படும்.

x. வியாபார சென்மதியாளன் கடன் ரூ 20,000 இனை தீர்ப்பனவுக்காக 10% கழிவு பெறப்பட்டு காசு செலுத்தப்பட்டது.

மேலதிக தகவல்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கிரயத்தில் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது.

வேண்டப்படுவது

1. 01/04/2022 ல் உள்ள ஆரம்ப மீதிகளைப் பதிவு செய்து i தொடக்கம் x வரையான கொடுக்கல் வாங்கல்களின் விளைவுகளை பின்வரும் கணக்கீட்டு சமன்பாட்டில் பதிவு செய்து பெறுமதிகளுக்கு முன் அதிகரிப்பாயின் (+) எனவும் குறையுமாயின் (-) எனவும் குறிப்பிடுக.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

| | சொத்துக்கள் | | | | பொறுப்பு | | | உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம், பொறி, உபகரணம் | இருப்பு | வியாபார வருமதி | வங்கி | நடைமுறை அல்லா பொறுப்ப | வியாபார சென்மதி | ஏனைய சென்மதி | |
| ஆரம்பமீதி | | | | | | | | |
| (i) | | | | | | | | |
| (ii) | | | | | | | | |
| (iii) | | | | | | | | |

2. 30/04/2022 ல் முடிவடைந்த மாதத்திற்கான வருமானக் கூற்று.

(புள்ளிகள் 40)

**04)** அ) அறிவு தனது சொந்த சேமிப்பிலிருந்து ரூ 800000 ஐ முதலிட்டு 01/03/2022 இல் வியாபாரமொன்றை ஆரம்பித்தார். 2022 மார்ச் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் தரப்பட்டுள்ளது.

i) காசுப் பெறுவனவுகளும் கொடுப்பனவகளும்

| | |
|---|---|
| **பெறுவனவுகள்** | '000' |
| விற்பனை | 2000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்றகாசு | 5800 |
| பெற்றவாடகை | 100 |
| **கொடுப்பனவகள்** | |
| கொள்வனவுகள் | 1400 |
| கடன்கொடுநருக்கு செலுத்திய காசு | 3600 |
| செலவுகள் | 1000 |
| பற்றுக்கள் | 50 |

ii) கடன்கொடுத்தோரிடமிருந்து ரூ400,000 காசுக்கழிவு பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் கடன்பட்டோருக்கு ரூ 300,000 காசுக்கழிவு கொடுக்கப்பட்டுள்ளது.

iii) ஏனைய மூலப்பதிவேடுகளின் மொத்தங்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| மூலப்பதிவேடு | மொத்தம் ரூ '000' |
| விற்பனை நாளேடு | 10500 |
| கொள்வவு நாளேடு | 11000 |
| விற்பனைத்திரும்பல் நாளேடு | 400 |
| கொள்வனவுத் திரும்பல் நாளேடு | 300 |

iv) 31/03/2022 ல் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கினதும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கினதும் மீதிகள் அவற்றின் துணைப்பேரேட்டுக் கணக்குகளின் மீதிகளின் மொத்தங்களுடன் ஒத்திருக்கவில்லை. இது தொடர்பான பரீசீலனையின்போது பின்வருவன தெரியவந்தன

1. கடனுக்கு கொள்வனவு செய்ய்ப்பட்ட ரூ 500,000 பெறுமதியான உபகரணமொன்று கொள்வனவு நாளேட்டில் பதியப்பட்டுள்ளது.
2. இம்மாத்தில் பதிவழிக்கப்பட்ட ரூ 150,000 அறவிட முடியாக்கடனானது கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.
3. கொள்வனவுத்திரும்பல் நாளேட்டின் மொத்தத் தொகையான ரூ 300000 கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கில் ரூ 400000 எனப் பதிவிடப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது

1. 2022 மார்ச் மாத்திற்கான காசுப்பெறுவனவு நாளேடும், காசுக்கொடுப்பனவு நாளேடும்
2. வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள். (விளம்பல் அவசியமானது)
3. வழுக்களைத் திருத்திய பின்னரான கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கும், கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டக் கணக்கும்.

(புள்ளிகள் 20)

ஆ) பாடசாலையொன்று வருடாந்த சுற்றுலா பயணத்தை மாணவர்களுக்காக திட்டமிட்டிருந்தது பாடசாலையின் கணக்கீட்டு ஆசிரியர் சுற்றுலாப்பயணத்திற்கான பின்வரும் தகவல்களினை மதிப்பிட்டிருந்தார்.

மாணவனொருவருக்கான அறவிடப்படும் கட்டணம் ரூ 3000
50 இருக்கைகளைக் கொண்ட பேரூந்துக்கான வாடகை ரூ 60000
பேரூந்து ஒன்றிற்கான சாரதிக்காகவும், உதவியாளருக்குமான கொடுப்பனவு ரூ 4000
ஒரு மனவனுக்கான சிற்றுண்டிச் செலவு ரூ ?
மொத்த செலவினை ஈடுசெய்வதற்கு பங்குபெற்றவேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை 80 மாணவர்கள்
சுற்றுலாப்பயணத்தின் போது பங்குபற்றக்கூடிய, எதிர்பார்க்கப்படும் உச்ச மாணவர்களின் எண்ணிக்கை 100 மாணவர்கள்
பேரூந்தொன்றின் இருக்கைகளின் உச்சஎண்ணிக்கைக்கு பயணம் செய்யும் மாணவர்கள் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது

1. சுற்றுலாப் பயணத்தின் மொத்த நிலையான செலவு
2. மாணவனொருவனுக்கான பங்களிப்பு
3. மாணவனொருவனுக்கான சிற்றுண்டிச் செலவு
4. சுற்றுலாப்பயணத்தின் பாதுகாப்ப எல்லை மாணவர்கள் எண்ணிக்கையிலும், ரூபாவிலும்
5. எதிர்பார்க்கப்பட்ட மாணவர்கள் சுற்றுலாப் பயணத்தில் பங்குகொள்வார்களாயின், சுற்றுலாப்பயணத்தின் மிகை?
6. 64 மாணவர்கள் மட்டும் சுற்றுலாவில் பங்குகெர்வார்களாயின் மொத்த செலவினை ஈடுசெய்வதற்கு மாணவரொருவரிடம் அறிவிடப்படும் கட்டணம்?

**05)** (அ) சானு, சந்தியா பங்குடமையொன்றின் பங்காளர்களாவர் இப் பங்குடமையின் ஒப்பந்தம் பின்வருமாறு.

- இலாப/ நட்டப் பகிர்வு வீதம் 2:1
- பங்காளர்களின் வருடாந்த சம்பளம் முறையே ரூ 60.000, ரூ 40.000 பெறுவதற்கு உரித்துடையவராவர்.
- ஆரம்ப மூலதன மீதிக்கு வருடாந்தம் 10% மூலதன வட்டி வழங்கப்படும்
- பங்காளர்களால் வழங்கப்பட்ட கடன்களுக்கு வருடாந்தம் 8% வட்டி வழங்கப்படும்.

31.03.2022ல் பரீட்சை மீதி

| | **ரூ "000"** | |
|---|---|---|
| **விபரம்** | வரவு | செலவு |
| 01.04.2021ல் மூலதன கணக்கு – சானு | | 2000 |
| – சந்தியா | | 1000 |
| 01.04.2021 நடைமுறைக்கணக்கு – சானு | | 200 |
| – சந்தியா | | 150 |
| இருப்புக்கள் | 400 | |
| விற்பனை | | 3000 |
| விற்பனைக் கிரயம் | 1350 | |
| சானுவால் வழங்கப்பட்ட கடன் | | 300 |
| பற்றுக்கன் - சானு | 15 | |
| - சந்தியா | 10 | |
| நிலைய நிர்வாக செலவு | 400 | |
| விற்பனை விநியோக செலவு | 250 | |
| துஷாராவால் கொண்டு வரப்பட்ட காசு | | 2000 |
| நிதியும் ஏனைய செலவும் | 150 | |
| 31.03.2022ல் ஆதனம், பொறி மற்றும் உபகரண கொண்டு செல்மீதி | 4500 | |
| வங்கியிலுள்ள காசு | 1575 | |
| | **8650** | **8650** |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**மேலதிக தகவல்கள்:**

i) பங்காளர்களால் வழங்கப்பட்ட கடன்களுக்கு வட்டி செலுத்தப்படவோ, கணக்குகளில் பதியப்படவோ இல்லை.

ii) சானு பங்குடமையின் சார்பாக சொந்தப்பணத்தில் முகாமைக் கருத்தரங்கிற்காக கொழும்புக்கு பயணம் செய்தது தொடர்பாக ஏற்பட்ட போக்குவரத்து செலவு ரூ *30,000* ற்கு எதுவித பதிவுகளும் இடம்பெறவில்லை.

iii) *31.03.2022* இல் முடிவடைந்த வருடத்திற்காக பங்குடமை மோட்டார் வாகன காப்புறுதி பூட்கை ரூ *40,000* செலுத்தியது நிர்வாக செலவாக கணக்கிலிடப்பட்டுள்ளது. இருப்பினும் இக்காப்புறுதி பூட்கை சந்தியாவின் சொந்த வாகனத்தின் காப்புறுதி பூட்கை ரூ *10,000* ஐயும் உள்ளடக்கியுள்ளது.

iv) துஷா பங்குடமையின் புதிய பங்காளராக *31.03.2022* இல் சேர்க்கப்பட்டுள்ளார். இத்திகதியில் மூலதனப் பங்களிப்பிற்காகவும், நன்மதிப்பு பங்களிப்பிற்காகவும் ரூ *2000,000* கொண்டு வந்தார்.

- புதிய லாப/நட்ட விகிதம் சானு, சந்தியா, துஷா முறையே 2:2:1 ஆகும்.
- இத்தினத்தில் பங்குடமையின் நன்மதிப்பு ரூ *900,000* என மதிப்பிடப்பட்டது. நன்மதிப்பானது மூலதனக் கணக்கினூடாக உருவாக்கி பதிவழிக்கப்பட வேண்டும்.

v) பங்காளர்கள் சானு, சந்தியாவினால் ஆண்டுக்காலத்தில் முறையே ரூ *24,000*, *20,000* பொருட்கள் பற்றப்பட்டிருந்தது. இது தொடர்பாக எப்பதிவும் கணக்குகளில் இடம் பெறவில்லை.

vi) ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கு புத்தக மீதியில் 10% பெறுமானத்தேய்வு.

**வேண்டப்படுவது:**

1) *31.03.2022*ல் முடிவடைந்த வருடத்திற்கான பங்குடமையின் வருமான கூற்று (பங்காளர்கள் பகிர்வு கூற்று உள்ளடங்களாக)
2) *31.03.2022*ல் பங்காளர்கள் மூலதன கணக்கு, நடைமுறை கணக்கு

(*20* புள்ளிகள்)

(ஆ) றொனி தனியார் கம்பனியின் *31.03.2021* லும் *31.03.2022* லும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலமைக் கூற்றுக்கள் பின்வருமாறு.

| **விபரம்** | **(ரூ. "000")** | **(ரூ "000")** |
|---|---|---|
| | ***31.03.2022*** | ***31.03.2021*** |
| ஆதனம் பொறி மற்றும் உபகரண தேறிய புத்தக பெறுமதி | 40,000 | 25,000 |
| இருப்புக்கள் | 12,000 | 9,500 |
| வியாபார வருமதியாளன் | 9,000 | 11,000 |
| காசும் காசுக்கு சமமானவையும் | 3,500 | 2,000 |
| மொத்த சொத்துக்கள்: | 64,500 | 47,500 |

| | | |
|---|---|---|
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | 30,000 | 20,000 |
| மீள் மதிப்பீட்டு மிகை | 4,000 | 3.000 |
| நிறுத்தி வைத்த வருவாய் | 7,500 | 3.200 |
| குத்தகை கடன் கொடுத்தோர் | 15,700 | 17,800 |
| வியாபார சென்மதியாளன் | 5,200 | 1,850 |
| வருமான வரிக்கான ஏற்பாடு | 700 | 800 |
| வங்கி மேலதிகப் பற்று | 1,400 | 850 |
| மொத்தப் பொறுப்பும் உரிமையான்மையும் | 64,500 | 47.500 |

*31.03.2022*ல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள் வருமாறு:

1. நிதியாண்டுக் காலத்தில் கம்பனி இடைக்கால பங்குலாபமாக ரூ *900,000* செலுத்தப்பட்டது. நிறுத்தி வைத்த வருவாயை மூலதனமாக்கப்பட்டது. ரூ *4000,000* மேலும் கம்பனி *200,000* சாதாரண பங்குகள் பொது வழங்கல் செய்யப்பட்டது. பங்கு வழங்கல் மூலம் பெறப்பட்ட பிரதிபலன் காசாக பெற்றுக் கொள்ளப்பட்டது.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

2. ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு, வருமான வரிச்செலவு முறையே ரூ 2200,000, ரூ 800,000
3. கம்பனி 31.03.2022ல் முடிவடைந்த வருடத்தில், காணியானது முதற்தடவையாக மீள் மதிப்பீடு செய்து மிகை ஏற்பட்டுள்ளது.
   வேறு ஏதுவித மீள்மதிப்பீடும் நிதி வருடத்தில் இடம்பெறவில்லை.
4. 01.01.2022ல் கம்பனியால் மோட்டார் வாகனம் ரூ 350,000 ஆதாயத்துடன் அகற்றப்பட்டது. இம் மோட்டார் வாகனம் 01.01.2020ல் ரூ 3500,000 ற்கு கொள்வனவு செய்யப்பட்டது. மோட்டார் வாகனம் கிரயத்தில் 20% நேர்கோட்டடிப்படையில் பெறுமானத் தேய்விடப்படுகின்றது. மேலும் புதிய இயந்திரம் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

**வேண்டப்படுவது:**

LKAS 07ன் சார்பாக 31.03.2022ல் முடிவடைந்த ஆண்டிற்கான றொனி தனியார் கம்பனியின் காசுப் பாய்ச்சல் கூற்று.

(20 புள்ளிகள்)

**06)** அ) யூனிஸ் தனியார் கம்பனியின் 31.03.2022ல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள் வருமாறு.

| விபரம் | (ரூ. "000") |
|---|---|
| விற்பனை | 6500 |
| ஆண்டுக்கான லாபம் (வரிக்குப்பின் லாபம்) | 1500 |
| ஆண்டுக்கான வட்டிச் செலவு | 400 |
| ஆண்டுக்கான வரிச் செலவு | 500 |

31.03.2022ல் உள்ளவாறான

| மொத்த சொத்துக்கள் | (ரூ. "000") |
|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 4000 |
| இருப்புக்கள் | 300 |
| வியாபார வருமதியாளன் | 800 |
| காசு | 400 |

| மொத்த பொறுப்புக்கள் | (ரூ. "000") |
|---|---|
| வியாபார சென்மதியாளன் | 500 |
| 3 வருடத்தில் செலுத்தப்பட வேண்டிய வங்கிக்கடன் | 2000 |

**மேலதிக தகவல்கள்**

1. 31.03.2021ல் வியாபார வருமதியாளன் ரூ 500.000
2. எல்லா விற்பனைகளும் கடனடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

**வேண்டப்படுவது:**

31.03.2022 இல் முடிவடைந்த ஆண்டிற்காக:

1) நடைமுறை விகிதம்
2) கடன்பட்டோர் புரள்வு விகிதம் (சராசரிக் கடன்பட்டோர் அடிப்படை)
3) உரிமை மீதான திரும்பல் வீதம்
4) வட்டி காப்பு விகிதம்
5) சொத்துக்கள் புரள்வு விகிதம் (ஆண்டுறுதி சொத்தின் அடிப்படை)

(15 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

ஆ) அஜன் விளையாட்டு கழகமானது தனது அங்கத்தவர்களுக்காக உள்ளக விளையாட்டு அரங்கையும், சினிமா தியேட்டரையும் பேணி வருகின்றது. 31.03.2021, 31.03.2022ல் உள்ளவாறான அதன் சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வருமாறு:

| **விபரம்** | **31.03.2022ல் உள்ளவாறான ரூ "000"** | **31.03.2021ல் உள்ளவாறான ரூ "000"** |
|---|---|---|
| கட்டிடம் (முன்கொண்டு செல்தொகையில்) | 2000 | 2400 |
| சினிமா தியேட்டர் (முன்கொண்டு செல் தொகையில்) | 4500 | 5000 |
| முற்பணமாகப் பெற்ற சினிமா தியேட்டர் வாடகை வருமானம் | 60 | 50 |
| வருமதி சந்தா | 80 | 70 |
| நிலையான வைப்பு | 1300 | - |
| காசு | ? | 200 |

31.03.2022ல் முடிவடைந்த வருடத்திற்கான தகவல்கள் வருமாறு:

1. பின்வரும் சகல செலவுகளும் காசாக செலுத்தப்பட்டவையாகும்.

| | ரூ "000" |
|---|---|
| தியேட்டர் முகாமையாளருக்கான வருடாந்த சம்பளம் | 250 |
| ஏனைய ஊழியர்களுக்கான வருடாந்த சம்பளம் | 1100 |
| ஏனைய செலவுகள் | 250 |

2. சினிமா தியேட்டரானது வெளியிலுள்ள நிறுவனங்களுக்கும் பொழுது போக்கிற்காக வாடகைக்கு விடப்படுகின்றது. இவ்வாண்டில் வாடகைக்கு விடப்பட்ட நாட்களின் எண்ணிக்கைகளும் அறவிடப்பட்ட கட்டணங்களும் பின்வருவனவாகும்.

| கட்டணம் | வாடகைக்கு விடப்பட்ட நாட்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஒரு நாளுக்கு ரூ 50,000 ப் படி | 30 |
| அரை நாளுக்கு ரூ 30,000 ப் படி | 20 |

3. அங்கத்தவர் ஒருவருக்கான மாத சந்தா ரூபா 1000 ஆகும். 01.04.2021 இல் 100 அங்கத்தவர்கள் காணப்பட்டதுடன் அன்றைய தினம் 10 புதிய அங்கத்தவர்கள் இணைந்து கொண்டனர். இப்புதிய அங்கத்தவர்கள் முழு ஆண்டுக்குமான சந்தாவைச் செலுத்தினர். ஆரம்பத்தில் இருந்த 15 அங்கத்தவர்கள் 30.09.2021ல் விலிகினர் விலகிய சகல அங்கத்தவர்களும் அத்திகதி வரையான தமது சகல நிலுவைகளையும் செலுத்தியிருந்தனர். 31.03.2021 இல் நிலுவையாக காணப்பட்ட முழுச்சந்தாவும் நடைமுறை ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்டது.
4. வருடாந்தம் 10% வட்டி வீதத்தில் ஒரு வருடத்தைக் கொண்ட நிலையான வைப்புக் கணக்கானது 01.01.2022 இல் ஆரம்பிக்கப்பட்டது.
5. இவ்வாண்டில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பில் எதுவித கொள்வனவுகளும் அகற்றல்களும் நடைபெறவில்லை.

**வேண்டப்படுவது:**

1) 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானச் செலவு கூற்று
2) 31.03.2022 இல் உள்ள படியான திரண்ட நிதி, மற்றும் காசு மீதி

(25 புள்ளிகள்)